பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
"ஷப்ரு"
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
207, Power House Road,
JAFFNA.

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞூ கார்த்திகை மீ 23 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 27 (08 - 12 - 1988) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 11

## அங்கொடை ஆஸ்பத்திரியிலிருந்து 500 மனநோயாளர்கள் தப்பினர்

### கொழும்பில் மக்களிடையே பீதி! படையினர் தேடுதல் வேட்டை!!

அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரியிலிருந்து நேற்று ஐந்நூறு மனநோயாளர்கள் வெளியேறிவிட்டனர்.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் ஆஸ்பத்திரியைத் திறந்தவிட்டு அதன் சாவிகளை அங்கொடை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று நேற்றுத் திடீரென்று ஒப்படைத்தனர்.

ஊழியர்கள், காவலர்கள் இன்றி ஆஸ்பத்திரிக் கதவுகள் அகலத் திறந்திருந்ததைக் கண்ட மனநோயாளர்கள் ஆஸ்பத்திரியை விட்டு குதூகலத்துடன் வெளியேறியதாகக் கூறப்படுகிறது.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் கடமையில் ஈடு

(6ஆம் பக்கம் பார்க்க)

### தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களினால்

# கொழும்பு மீண்டும் செயல் இழந்தது!

## அரச அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகள் நேற்று முற்றாகப் பாதிப்படைந்தன

கொழும்பு டிச 8

தென்பகுதித் தீவிரவாதிகள் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து கொழும்பு மாநகரில் அரச அலுவலகங்கள், துறைமுகங்கள், ரயில்வே, அரசாங்க ஆஸ்பத்திரிகள் உட்பட பல சேவைகள் நேற்று மீண்டும் செயல் இழந்தன.

நேற்றுத் தொடக்கம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் தினமான 19 ஆம் திகதி வரை தென்பகுதியில் அரச ஊழியர்கள் கடமைக்குச் சமுகமளிக்கக் கூடாது என்று தென்பகுதித் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்திருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்பகுதித் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை அடுத்து கொழும்பு பெரியாஸ்பத்திரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரி ஆகியவற்றில் சிற்றூழியர்கள் நேற்று கடமைக்குச் சமுகம் தரவில்லை.

இதனால் இந்த இரு ஆஸ்பத்திரிகளும் நேற்று செயல் இழந்தன.

இதேசமயம் கொழும்பில் நேற்று ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டன.

ரயில்வே ஊழியர்கள் பெருமளவில் கடமைக்கு வரத்தவறியதே இதற்குக் காரணமென்று கூறப்படுகிறது.

தற்போது தென்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ—ஐ)

### முச்சந்தி முரளி



விடுதலை! விடுதலை!! அங்கொடைக்காரர்களுக்கு விடுதலை!!! என்று ஆனந்தப்பள்ளு பாடுவோம்...!

## இஸ்ரவேலுடன் தொடர்பு வைக்கக் கூடாது!

### ஐ. நா. போதுச்சபை தீர்மானம்

இஸ்ரவேல் அமைதியை விரும்பாத நாடு. அதனுடன் உலக நாடுகள் தொடர்பு வைக்கக் கூடாது.

—இப்படிக் கூறும் பிரேரணை ஒன்று நேற்று ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆயிரம் ரூபா நிவாரணம்:

## மேலும் 4,762 குடும்பங்களின் பட்டியல்கள் வங்கிகளுக்கு

யாழ்ப்பாணம், டிச. 8

இடம் பெயர்ந்தோருக்கான மீளக் குடியமர்தல் நிவாரணமான ஆயிரம் ரூபா பெறும் மேலும் 4 ஆயிரத்து 762 குடும்பங்களின் பெயர்ப் பட்டியல்கள் வங்கிகளுக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் ஆயிரத்து 925 குடும்பங்களினதும், நேற்று 2 ஆயிரத்து 837 குடும்பங்களினதும் பட்டியல்கள் அனுப்பப்பட்டன.

நேற்று முன் தினம் அனுப்பப்பட்ட பட்டியலின் விவரம் வருமாறு:-

தெல்லிப்பளை உ. அ. அ. பிரிவு— 628 குடும்பங்கள் (காங்கேசன் துறை, இலங்கை வங்கிக்கிளை).

★ பலாலி கிழக்கு—49
★ நகுலேஸ்வரம் —26
★ பலாலி மேற்கு—219
★ தெல்லிப்பளை கிழக்கு — 139
★ மாவிட்டபுரம்—195

2. சாவகச்சேரி உ. அ. அ. பிரிவு — 260 குடும்பங்கள் (சாவகச்சேரி, இலங்கை வங்கிக் கிளை)

★ கைதடி, நுணுவில்—83
★ கைதடி தெற்கு—67
★ மீசாலை தெற்கு—110

3 கோப்பாய் உ. அ. அ. பிரிவு—420 குடும்பங்கள் (யாழ். ஆஸ்பத்திரி வீதி, இலங்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

8 - 12 - 1988
கார்த்திகை 23
வியாழக்கிழமை
சுபநேரம்:-
07-48 முதல் 09-18 வரை
ராகுகாலம்:-
01-48 முதல் 03-18 வரை
அமாவாசை விரதம்.

## இரு பெண்கள் காயம்

யாழ்ப்பாணம், டிச 8

யாழ் பஸ் நிலையப் பகுதியில் நேற்று மாலை மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு பெண்கள் காயமடைந்தனர். இருவரும் பின்னர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த பற்றீஸியா (வயது 21) ராஜபூபதி கந்தையா (வயது 31) ஆகியோரே காயமடைந்தவர்கள்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரை அமைதிப் படையினர் கூட்டிச் சென்றனர். (ஓ)

## சுன்னாகத்தில் பழுதடைந்த ஜெனரேட்டர்களில் ஒன்று சீர் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், டிச.8

சுன்னாகம் மின்நிலையத்தில் பழுதடைந்திருந்த இரண்டு ஜெனரேட்டர்களில் ஒன்று திருத்தப்பட்டுள்ளது. எனவே தற்பொழுதுமேற்கொள்ளப்பட்டுவரும் மின்சார விநியோகத்தில் மாற்றம் இருக்காது.

மின்சாரசபை வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

சுன்னாகத்தில் உள்ள இலங்கை மின்சாரசபையின் ஐந்து ஜெனரேட்டர்கள் மூலமாகவே யாழ் மாவட்டத்திற்கு மின்சாரவிநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த ஜெனரேட்டர்கள் சுமார் 20 வருடம் பழைமை வாய்ந்தவை.

இவற்றில் இரண்டு பழுதடைந்தமையினால் யாழ் மாவட்டத்திற்கான மின்சாரவிநியோகம் பாதிக்கப்படலாம் என முன்னர் அச்சம் தெரிவிக்கப்பட்டது.

பழுதடைந்த இரண்டில் ஒன்று தற்பொழுது திருத்தப்பட்டுள்ளது. அதனுடன் சேர்ந்து நான்கு ஜெனரேட்டர்கள் தற்போது இயங்குகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-5)

## நல்லூர் உ. அ. அ. பிரிவில் பாண் தயாரிப்பு நிறுத்தம்

### 24 பேக்கரி உரிமையாளர்கள் கூட்டாக முடிவு

யாழ்ப்பாணம், டிச. 8

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இயங்கும் 24 பேக்கரி உரிமையாளர்களும் பாண் தயாரிப்பை நிறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நியாய விலையில் மா கொள்வனவு செய்ய முடியாது இருப்பதால் கட்டுப்பாட்டு விலையில் பாணை விற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனாலேயே பாண் தயாரிப்பை பேக்கரி உரிமையாளர்கள் நிறுத்தியிருக்கின்றனர்.

இந்த 24 பேக்கரி உரிமையாளர்களும் நேற்று ஒன்றுகூடி பேக்கரி உரிமையாளர் சங்கம் ஒன்றையும் அமைத்துள்ளனர்.

நியாய விலையில் மாவைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்டிருக்கும் கஷ்டம் குறித்து பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் நேற்று யாழ் அரச அதிபரைச் சந்தித்து உரையாடியது. (உ-10)

## பல்கலைக்கழக மாணவர் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிச.8

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று துணைவேந்தர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் ஒன்றை அடுத்தே இந்த நடவடிக்கையில் மாணவர்கள் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் பணம் நீண்டகாலமாக வழங்கப்படாததை ஆட்சேபித்து எதிர்ப்பு நடவடிக்கைளில் மாணவர்கள் ஈடுபட்டதாகவும்—

அவ்வேளையில் பல்கலைக்கழக உத்தியோகஸ்தர்கள் சிலர் மாண

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கலைப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

### கொழும்பில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 8

1986 ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களை விட்டு வெளியேறிய கலைப்பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடைபெறுகின்றன.

1986 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறிய சுமார் 150 கலைப்பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கான பரீட்சைகள் ஏற்கெனவே முடிவடைந்துவிட்டன.

இவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான இறுதி நேர்முகப் பரீட்சை கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கொழும்பில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனிக்குளத்தில் கண்ணி; பாலம் சேதம் அடைந்தது

மாங்குளம், டிச 8

மாங்குளத்தைச் சேர்ந்த வவுனிக்குளம் பகுதியில் கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் பாலம் ஒன்று சேதமடைந்தது.

அதேவேளை சறுப்பிகுளம் என்னும் இடத்தில் நேரடி மோதல் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றது.

இச்சம்பவங்களை அடுத்து அன்று இரவு இப்பகுதியில் ஷெல் தாக்குதல் இடம்பெற்றதாகச் சொல்லப்பட்டது.

மல்லாவி, முதலாம் யூனிட், 2 ஆம் யூனிட் பாண்டியங்குளம் ஆகிய பகுதிகளில் தற்போது பதற்ற நிலை நிலவுகிறது.

(ஓ-94)

## 10 முதல் 19ஆம் திகதிவரை கடைகளை மூடுமாறு எச்சரிக்கை

கொழும்பு, டிச. 8

எதிர்வரும் பத்தாம் திகதிமுதல் பத்தொன்பதாம் திகதிவரை தென்பகுதியில் கடைகளைத் திறக்கக்கூடாது என்று அங்குள்ள தீவிரவாத இயக்கம் ஒன்று எச்சரிக்கை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளையில் சம்பந்தப்பட்ட தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் அவிசாவளைப் பகுதியிலுள்ள மலையகத் தமிழரின் வீடுகளுக்குச்சென்று எதிர்வரும் 19 ஆம் திகதி ஒருவரும் தமது வீடுகளை விட்டு வெளியே வரக் கூடாது என்று எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

(உ-ஐ)

### தென்பகுதியில்

## இயங்காத கச்சேரிகள் ராணுவ அதிகாரிகளின் கீழ்?

கொழும்பு, டிச. 8

தென் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்டபடி நடத்தும் ஒரு நடவடிக்கையாக— இயங்காத கச்சேரிகளுக்குப் பொறுப்பாக இராணுவ இணைப்பதிகாரிகளை நியமிப்பது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களை அடுத்து தென்பகுதியில் பல கச்சேரிகள் இயங்கமுடியாத நிலையில் இருக்கின்றன. சிவில் நிர்வாகமும் பாதிப்புற்றிருக்கின்றது.

இந்த நிலை நீடிக்குமானால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலையும் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே பதுளை அரசாங்க அதிபர் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக தமது பதவியை இராஜினாமா செய்ததும்—

இதனையடுத்து அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இராணுவ இணைப்பதிகாரி ஒருவரை அரசாங்கம் நியமித்ததும் தெரிந்ததே. (உ-ஐ)

## படையினரைப் பாதுகாக்க தண்டனை தவிர்ப்புச் சட்டம்

### நேற்று நிறைவேற்றப்பட்டது

கொழும்பு டிச 8

தண்டனை தவிர்ப்புச் சட்டமூலம் (Indemnity Bill) நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 56 வாக்குகள் கிடைத்தன.

எதிர்த்து கலவான எம். பி. டியூ குணசேகராவும் சம்பஹறா எம். பி. எஸ். டி. பண்டாரநாயக்காவும் வாக்களித்தனர்.

விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னதாவது;

நாட்டைப் பாதுகாப்பதற்குத் தங்களைத் தியாகஞ் செய்து வரும் ஆயுதப் படையினரைப் பாதுகாக்கவே இச்சட்டம் கொண்டு வரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்த புதிய சட்டம்

### அமைச்சரவை நேற்று முடிவு

கொழும்பு, டிச 8

நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நிதி திட்டமிடல் அமைச்சர் நைனா மரைக்காயர் சமர்ப்பித்தயோசனையை அமைச்சரவை நேற்று ஏற்றுக்கொண்டது.

நிதி நிறுவனங்களை மத்திய வங்கியின் நாணயச் சபை மேற்பார்வை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இச்சட்டம் வழிவகுக்கும்.

1982 ஆம்ஆண்டு நிதிக் கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பொதுக் கம்பெனி ஒன்றைத் தவிர வேறு எந்த நிறுவனங்களும் நிதி சம்பந்தமான தொழிலில் ஈடுபட முடியாது.

இத்தகைய பொதுக் கம்பனி ஒன்று 50 லட்சம் ரூபாவுக்குக் கூடுதலான மூலதனத்தைக் கொண்டதாகவும்—

இந்த நிதிக் கம்பனிகள் சட்டத்தினால் பதிவு செய்யப்பட்டு மேற்பார்வை செய்யப்படுவதாகவும் இருக்கவேண்டும். (உ-எ)

## கடலில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், டிச. 8

கடல் அட்டை பிடிக்கச் சென்றவர் கடலில் மூழ்கி மரணமானார்.

குருநகரைச் சேர்ந்த எஸ். ஜெயரட்ணம் (வயது 33) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

இவரது மரணம் தொடர்பான விசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. (உ-10)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda C B I 25 Twin (Allay Wheel) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ. நாகேந்திரராசா, சோதிட திருமண சேவை இல 6 நவீன சந்தை. (மேல்மாடி) யாழ்ப்பாணம். (8046)

5: K V, A C. 230 V டீசல், ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. நா சிவபாலமூர்த்தி, பாதிரி கோவிலடி லேன், கே கே எஸ். ரோட், கொக்குவில் (8062)

பாவித்த தளபாடங்கள் ஹோல் செற், Show Case, கண்ணாடி மேசை, நேசறி மேசை, பெற்றோல்மெஷ்ன். Baby Cot, கட்டில் Singer Hand Machine மற்றும் பல உடன் மலிவுவிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 326, பிரதான வீதி. யாழ்ப்பாணம் (சென். பற்றிக்ஸ் சந்தி அருகாமையில்) (8060)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards) திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரவி ஜவுளியகம், 146, நவீன சந்தை. யாழ்ப்பாணம். (C/357)

## கலண்டர்கள டயறிகள்

மெய்கண்டான, லீலா, ஆனந்தா, சஷ்டலக்ஷ்மி, தாளயன், கலண்டர்கள், வாக்கிய, திருக்கணித பஞ்சாங்க கலண்டர்கள், மற்றும் Observer Sivali உதயா, லீலா, இன்னும் பல வகையான டயறிகள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் 8045)

## தேவை

நடனம் வாய்ப்பாட்டு வீணை வயலின், புல்லாங்குழல் ஆகியபாடங்கள் தரம் I இலிருந்து ஆசிரியர் தரம் வரை கற்பிப்பதற்கு தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதி:- 30 - 12 88 கலாலயா, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம் (C/886)

கொம்பியூட்டர் பிளாஸ்ரிக் வேலை— இயக்கசாலையில் அனுபவமுள்ள அல்லது பழக விரும்பும் இருபாலாரும் விண்ணப்பிக்கவும். செல்வம் ஆட்ஸ் சுன்னாகம் 8074)

புரொயிலர் கோழி மொத்தமாக உடன் தேவை. நேரில் 8 30a.m 9 30 am இடையில் தொடர்பு கொள்ளவும். மெடிக்கல் ஹோல் டிஸ்பென்சறி 224 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் C/889)

## உடன் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீம் ஹவுஸ் ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமிக்க வெயிட்டர்கள் உடன் தேவை. தொடர்பு:- யாழ்ஹிக்கோ சுவிற் அன் ஸ்ரீம் ஹவுஸ், 352, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (8042)

## திருமண சேவை

இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கு மணமக்கள் தேவையாயின் தகுதிக்கும், தரத்திற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும். சாதகக் குறிப்பும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: 'சாயி மங்கள' 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (8056)

## தவறிவிட்டது

நாகலிங்கம் - கைலைநாதன் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம் இல. DL 014660 கச்சேரியில் பாஸ் கொடுக்கும் இடத்தில் மாறி எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8047)

## வகுப்புகள்

## மிருதங்க வகுப்புகள்

தரம் I தொடக்கம் ஆசிரியர் தரம் வரையிலான வகுப்புக்களுடன் வருடந்தோறும் வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் மிருதங்க பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏற்றவகையில் பயிற்றுவிக்கப்படும். வகுப்புகள் சனி ஞாயிறு பி ப 2.00 மணிக்கு நடைபெறும். கலாலயா பதிவு செய்யப்பட்டது) விக்ரோரியா வீதி, யாழ்ப்பாணம். (C/887)

## துரிதமீட்டல் வினாவிடை வகுப்பு

க பொ த (சா த) Dec 88. கணிதம் திரு நா. நல்லையா (யாழ் இந்து கணித ஆசிரியர் ஆரம்பம் 09 12 1988 வெள்ளிக்கிழமை. திங்கள், புதன், வெள்ளி காலை 9 00மணி 190 முதலாம் குறுக்குத் தெரு (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்) (8072)

## Advanced English

புதிய பிரிவு ஆரம்பம் 11-12 88 சனி ஞாயிறு நாட்களில். நேரம் 2 மணி 4 மணி. S B Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7787)

## அந்தியேஷ்டி அழைப்பிதழ்

### சுப்பிரமணியம் நடேசலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 23. 0?. 1937 மறைவு 09. 11. 1988

வசாவிளான் அமரர் தம்பாப்பிள்ளை சுப்பிரமணியம் விசாலாட்சி ஆகியோரின் மூத்த புதல்வரும், கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் அ. மி பாடசாலை ஆசிரியை பொன்னம்மாவின் அன்புக் கணவரும் நெல்லியடி ம. ம வி மாணவன் செந்தூரனின் அன்புத் தகப்பனாரும், கோண்டாவில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை ஆசிரியர் இலங்கை நாயகம், மகாலிங்கசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரருமான நடேசலிங்கம் 09- 11- 1988 அன்று நெல்லியடியில் அகால மரணமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியைகள் நாளை 09- 12- 1988 (வெள்ளிக்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, மகன்
தாய், சகோதரர்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (8178)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு. சின்னர் இராசதுரை

அன்னையின் மடியில்: 1939 10 01 அழிப்பு: 1987-11-20

திதி:- 1988 12 08

எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாய் நின்று எங்கள் எல்லோரையும் உங்கள் அன்பால் ஆட்கொண்ட எங்களது அன்புத் தெய்வமே!

உங்கள் இன்னுயிர் பிரிந்த அன்னைள் எங்கள் இன்னல் கோல் - எங்கள் நெஞ்சமெல்லாம் அழுகிறதே! ஒருவருடம் என்ன ஒரு சகாப்தம் ஆனாலும் நம் எப்படி அந்த (87) எண்பத்தேழை மறப்போம்? மறக்கத்தான் முடியுமா? எங்கள் வாழ் நாட்கள் இனி உங்கள் நினைவுடன்தான்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்
மாமன், மாமி, மைத்துனன்மார்.
மைத்துனிமார்.

சுதுமலை, தெற்கு 1

(8188)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. இளையதம்பி சிவராசா

(அதிபர் ந/ஞானோதய வித்தியாலயம்)

உதிர்வு: 19 - 05 1987



### திருமதி பராசக்தி சிவராசா

(யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்)

உதிர்வு: 21 - 10 - 1987

ஆண்டுதான் ஒன்று கடந்தாலும் - என்ன
ஆசையுடன் பாசத்துடன் வளர்த்த எங்கள்
அம்மா, அப்பாவே! நீங்கள் எங்கு சென்றுவிட்டீர்களோ?
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நாதம் இவ்வுலகில் மறையாது

" அன்னார்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம் "

உங்கள் இழப்பால் பரிதவிக்கும்,
(8076) அன்புமக்கள்: சிவசக்தி, சி[illegible]

## கோயிலில் கொள்ளை

கோப்பாய், டிச 8 நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் இருந்து சுமார் ரூபா 2 லட்சம் பெறுமதியான தங்கம் உட்படபல பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. (இ-72)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம்

**A/L 90**

புவியியல்

க. குணராஜா - (9 மணி)

இந்திய வரலாறு (History)

அருள் நங்கை

புதிய பிரிவு

ஆரம்பம்: 10-12-1988

(C/690)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு. ச. சி. சோமசுந்தரம்பிள்ளை

(வைத்தியர்)

அன்னை மடியில்: 1924-08-31 இறைவனடியில்: 1987 12-08

திதி: 1988-11-26

அன்பின் திருவுருவே!

உங்களைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவால் வாடும் .....

மனைவி, மக்கள்,
சகோதரி, மருமக்கள்,
பேரன்மார்.

மாமுனை,
முள்ளியவளை.

(7798)

## 45 ஆம் நினைவு நாள்



அமரர்

### திரு. சி. சிவராசபிள்ளை

(புளோறு)

(சுன்னாகம் வர்த்தக சங்கத் தலைவர்)

பிறப்பு: 24 - 01 - 1949

இறப்பு: 25 - 10 - 1988

நாளொன்றேனும் அன்புச் செல்வங்களை
விட்டுப் பிரிய இயலா உம்மை
நம்முலகை விட்டு விண்ணுலகனுப்பினரே
-பிள்ளைகள்.

உம்மாத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இந்நாளில்
அப்பா வருவாரா என்று வினவும் உமதன்புச்
செல்வனுக்கு என்ன பதிலுரைப்பேன்?
-மனைவி.

சிங்கைத் தீவினிலுதித்த மைந்தா உன்னை
சிங்களத் தீவினில் பலி கொடுக்கவா
கொண்டிங்கு வந்தேன் -தாய்

மூத்தோனாய் எம்மை வழி நடத்திச் சென்றீர்
நடுக் காட்டில் விட்டுச் சென்றீர்
வழி தெரியாமல் தவிக்கின்றோம்
-சகோதரர்கள்

மக்கள் சேவகனாய் நற் தொண்டனாய்
சேவை செய்தீர்! உமயிடத்திற்கு
ஆளில்லாமல் தவிக்கின்றோம்.
-உற்றார், உறவினர்கள்.

அன்புத் தெய்வம் திரு. சிவசிதம்பரப்பிள்ளை சிவராசபிள்ளை அவர்களின் ஈமச்சடங்கில் கலந்து ஆறுதல் கூறியவர்கள் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள், சகல வழிகளிலும் [illegible] எல்லோருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (8075)

## வீதிகளை திருத்தும் வேலை

குருநகர், டிச 8 யாழ்நகரப் பகுதிகளில் வீதிகளில் செப்பனிடப்படுகின்ற வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதே வேளை பல வருடங்களாகக் கவனிப்பார் இன்றியும் பல வீதிகள் குன்றும் குழியுமாகவும் இருந்து வருகின்றன.

வண்ணார்பண்ணை மேற்கில் உள்ள சிவப்பிரகாசம் வீதி, கேசாவில் பிள்ளையார் வீதி, பத்திரகாளி கோயில் வீதி, முன்னாள் மேயர் துரைராசா வீதி முருகமூர்த்தி வீதி, லோட்டஸ் வீதி என்பன அவற்றில் சில. (இ-51)

## கல்விப்பட்டப் பின் படிப்பு பகுதிநேரம்/ முழுநேரம் 1988/1989

மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு எழுத்துத் தேர்வில் தகுதி பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் 02-01-1989 முறபகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பல்கலைக்கழகச் சபை அறையில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

தகுதி பெற்ற மாணவர்களுக்குக் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

— பதிவாளர்
30. 11. 1988

[C/476]

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வைத்திலிங்கம் தங்கமலர்

பிறப்பு: 09 - 11 - 1927 இறப்பு: 01 - 12 - 1986

உன் உயிர் உள்ளவரை எமக்காக வாழ்ந்தாய்! எம் உயிர் உள்ளவரை உன்னை நாம் மறவோம்: இரண்டு ஆண்டுகள் கழிந்தாலும் உமது நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாது.

— நினைவு கூருவது

தாயார்; கணவர்,
பிள்ளைகள், மருமகள்,
தங்கைகுடும்பத்தினர்,
தம்பி குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

செ. வைத்திலிங்கம்,
உடையார் ஒழுங்கை,
கொக்குவில்கிழக்கு.
கொக்குவில்.

(8191)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### க. கணபதிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 01- 06 1901 மறைவு: 08- 12- 1978

அன்பின் உருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்துடன் எம்மையெல்லாம் வழிநடத்திச்சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! உங்களுக்கு மோட்சராச்சியம் கிட்ட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கற்கோவளம்,
பருத்தித்துறை.

(8189)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு உரிய சம்பளம் இல்லை!

புதுக்குடியிருப்பு, டிச 8
1985ஆம் ஆண்டு இளைஞர் வேலை வாய்ப்பு அமைச்சின் ஊடாக கல்விச் சேவை ஆணைக் குழுவினால் தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனமோ பட்டதாரி ஆசிரியர்களுக்கான வேதனமோ வழங்கப்படவில்லை.

அதே சமயம் 1985ஆம் ஆண்டிற்குப் பின்னர் இதே அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனமும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான வேதனமும் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிலர் கல்விச் சேவை ஆணைக் குழுவுக்கு தமது நிலையை விளக்கியதாகத் தெரிய வருகின்றது.

இதன் பெறுபேருக சில மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் பட்டதாரிச் சம்பளமும், நிரந்தர நியமனமும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்கள் தமது நிலைமையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விளக்கியும் பலன் கிட்டவில்லை.

இப்பாகுபாட்டை அவர்கள் இப்போது பிரதம மந்திரியின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். (ச-186)

## கொள்ளையரைப் பிடிக்க முயன்ற இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், டிச. 8
கொள்ளையர்களைப் பிடிக்க முயன்ற இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த செல்லத்தம்பி செல்வானந்தன் (வயது 23) என்ற இளைஞரே இப்படி மரணமானார்.

இச் சம்பவம் கந்தர்மடம் அம்மன் வீதியில் திங்கட்கிழமை இரவு 8 மணி அளவில் இடம் பெற்றது.

அப்பகுதியில் நடமாடிய கொள்ளையர்களை எதிர்ப்பதற்காக அயலவர்களுடன் சேர்ந்து வீட்டைவிட்டு வீதிக்கு வந்த இந்த இளைஞன் திடீரென வந்த துப்பாக்கிச்சூடு ஒன்றுக்கு இலக்காகி மரணமானர்.

இவரது மரணம் தொடர்பான விசாரணை யாழ். பொலீஸ் பகுதியில் நடைபெற்றது (உ-10)

## பிறந்த தின வாழ்த்து

**திருமதி நவராணி அமலசுதன்**
**8-12-1988**

திருமதி நவராணி அமலசுதன் தனது 26 ஆவது பிறந்த தினத்தை அளவெட்டி தெற்கில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிருர்.

இவரை அப்பா, அம்மா, அண்ணு, தங்கைமார், தம்பி, மாமன், மாமி, கணவர் அமலசுதன், மைத்துனன் இடபாருடன் ஆகியோர் பதினாறு பேறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிருர்கள்.
[8180]

## லஞ்சம், ஊழலில் ஈடுபடுவோர்மீது நடவடிக்கை
## ரேலோ பேச்சாளர் சொல்கிருர்

வவுனியா, டிச. 8
மீளக்குடியமர்ந்துள்ள அகதிகளுக்கான நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட சகலருக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதுடன் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் நன்கொடை உதவிகளும் உரியவர்களுக்கு முறையாக வழங்கப்படவேண்டும் இவற்றில் லஞ்சம் பெறுபவர்கள் அல்லது ஊழல்களில் ஈடுபடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். — இப்படி ரெலோ இயக்கத்தின்மன்னார் பொறுப்பாளர்களில் ஒருவரான எஸ். அன்பு தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரப்பகுதியில் சிறிதுகாலம் இடைநிறுத்தப்பட்டிருந்த ஏசியன் தொலைக்காட்சி சேவை மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும். —

மாணவர்களுக்கான கல்விச்சேவை நிகழ்ச்சிகளும் இதில் இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-164)

மானிப்பாய் இந்துக்கல்லூரி முறை சாராக் கல்வி:

## குடியியல் படவரைஞர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், டிச 8
மானிப்பாய் இந்துக் கல்லூரிமுறை சாரா தொழில் நுட்பக்கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட குடியியல் படவரைஞர் பரீட்சை முடிவுகள் வருமாறு:

சித்தி அடைந்தோர்: 1. செல்வி பிரேமளா முத்தையா (அதி விசேட சித்தி நான்கு பாடங்களில்) 2. திரு. வல்லிபுரம் ரவீந்திரன் (மூன்று பாடங்களில் அதிவிசேட சித்தி) 3 திரு. கந்தசாமி விஜயகுமார் (இரண்டு பாடங்களில் அதிவிசேட சித்தி) 4. செல்வி சிவதஸி காராளசிங்கம் (ஒரு பாடத்தில் அதிவிசேட சித்தி) 5. செல்வி சிவசக்தி சிவஞானம் (ஒரு பாடத்தில் அதிவிசேட சித்தி) 6. திரு. யோகரஞ்சன் யோகேஸ்வரன் (இரண்டு பாடங்களில் அதிவிசேட சித்தி) 7. செல்வி ஸ்ரீவாணி கணேசலிங்கம் (ஒரு பாடத்தில் அதிவிசேட சித்தி) 8. செல்வி சாந்தினி இரத்தினசபாபதி (ஒரு பாடத்தில் அதி விசேட சித்தி) 9. செல்வி மதனகுமாரி பூபாலபிள்ளை, 10. செல்வி ரோகினி இராசையா, 11 திரு. திருநாவுக்கரசு பகிரதன், 12. திரு. அருளானந்தம் இராசேந்திரன், 13. திரு தாமோதரம்பிள்ளை தேவாதரன், 14. திரு. இளையதம்பி சங்காதரன் 15. திரு. செயமணி சருஞ்கரன், 16. செல்வி தேன்மொழி சண்முகம், 17. திரு. தாமோதரம்பிள்ளை தனபால், 18. திரு. குமாரசாமி ஆறுமுகதாசன், 19. திரு. நாகலிங்கம் ஸ்ரீகணேசன். 20. திரு. அரியரத்தினம் சிவானந்தன், 21 திரு இராமநாதன் தபானந்தன், 22. செல்வி பரமலட்சுமி ஆறுமுகம் (பரீட்சை பூர்த்தி) 23. செல்வி சாந்தினி சிவசிதம்பரம் (பரீட்சை பூர்த்தி) 24. திரு. T. பத்மராஜன் (பரீட்சை பூர்த்தி) (ச)

## தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து

மூளைக் காய்ச்சல், மலேரியா, வயிற்ருேட்டம் போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் தென்பகுதியில் ஏற்பட்டிருப்பதாக பிராந்திய சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளனர். (உ-எ)

### கல்விப் பணிப்பாளருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், டிச. 8
யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் ஜி. சி. ஈ உயர்தர வகுப்பை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குமாறு இவ்வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எஸ் கே. செபஸ்தியாம்பிள்ளை யாழ். கல்விப் பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (ச)

ஒதுக்கப்பட்ட ரூ. 2 1/2 கோடியில்

## ரூ. 2 கோடி 30 லட்சம் யாழ் மாவட்டத்தில் செலவு

யாழ்ப்பாணம், டிச 8
பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் யாழ் மாவட்டத்திற்கு இந்த வருடம் மொத்தம் இரண்டரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இதனால் இரண்டு கோடியே முப்பது லட்சம் ரூபா இதுவரை யாழ் மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்காகவும் செலவுசெய்யப்பட்டிருக்கிறது.

பாதை அபிவிருத்தி. மின்சார அபிவிருத்தி மற்றும் பாடசாலை கட்டட வேலைகள் இந்த நிதியைக் கொண்டு முக்கியமாக மேற்கொள்ளப்பட்டன (உ-ஐ·5)


உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் விபவ வருடம் கார்த்திகை மாதம் 25 ஆம் நாள் (10 - 12 - 1988) சனிக்கிழமை பகல் 11.31 மணிமுதல் 12.19 மணி வரையிலான சுபமுகூர்த்தத்தில்

காலஞ்சென்ற
திரு. ந. மாணிக்கநடராசா-ஜெகசோதி
தம்பதிகளின் புதல்வன்
திருநிறை செல்வன்
**கருணைஹரன்**
அவர்களுக்கும்

திரு. மு. சுப்பையா
தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
**சுபசீலி**
அவர்களுக்கும்

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் இறையருளால் நடைபெறும் திருமண வைபவத்திற்கு வருகை தரும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

ஞா. புகேந்திரன்
தம்பதிகள்
83/2, கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்.

மு. சுப்பையா
தம்பதிகள்
48, குமரபுரம்,
பரந்தன்.

(7992)



நீர்விநியோகம் உங்களுக்கு ஒரு பிரச்சினையா?
இன்றே தீர்வு காண
**சிங்கர்**
பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம்

கிணற்றில் அல்லது உயர நீர்த்தாங்கியில் இருந்து நீரைப் பெறும் நீங்கள் அமுக்கப் பிரச்சினைகளை எதிர்நோக்கினால் சிங்கரின் பிரஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை நாடித் தீர்வு காணுங்கள்.

சிங்கரிடம் பலவகையான பிறஷ் இல்லா மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள் உள்ளன. விரும்பியதைத் தேர்ந்தெடுத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

- அதிகபட்ச உறிஞ்சு திறன் 1400 கலன்/மணி முதல் 4500கலன்/மணி
- அதிகபட்ச உறிஞ்சு ஆழம் 25 அடி. (கிணறு மேலும் ஆழமெனின் ஆழ் கிணறு உபகரணங்கள் ரூ. 900/-க்கு உண்டு.)
- மொத்த விச்சு அளவு 65 அடி.

மொடல் ஈ.பி.எம். 10 1"×1" ரூ. 4,090/-
ஈ.பி. 15 1½"×1½" ரூ. 4,290/-
ஈ.பி. 20 2"×2" ரூ. 5,930/-



விவசாயப் பிரிவு
**சிங்கர்**
மாசற்ற மேன்மை
சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.
Minds/SA/7



WHEN YOU WANT TO OPEN THE RIGHT DOORS
IN SRI LANKA
REMEMBER

SHABRA

We have proved **S**tability
We have shown **H**onesty
We are very much **A**dvanced
We have the most **B**acking
We are so **R**eliable
Thats why we are on the move **A**head

for more details please contact:
**Shabra Unico Finance Limited**
207 Power House Road,
JAFFNA.



## மொத்த புடைவை வர்த்தகர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

பலதரப்பட்ட போலி 'ஷேர்ட்டிங்ஸ்' 'சீமா ஷேர்ட்டிங்ஸ்' என சந்தைப்படுத்தப்படுவதாக அறிய வந்துள்ளோம். எனவே எமது அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களின் பெயர்களையும் முகவரிகளையும் இங்கே குறிப்பிடுகின்றோம்.

"சீமா" ஷேர்ட்டிங்ஸ்ஸை இவர்களிடம் மாத்திரமே கொள்வனவு செய்து கொள்ளுங்கள், எமது 'சீமா' ஷேர்ட்டிங்ஸ் 1 - 12 - 1988 தொடக்கம் 'சீமா' லேபல் பொறிக்கப்பட்டு வெளிவருகிறது. இதனை அவதானித்து எமது ஷேர்ட்டிங்ஸை கொள்வனவு செய்யுங்கள்:

**எமது விநியோகஸ்தர்கள்:**
**யாழ்ப்பாணம்:**

1. லேடன் காமன்ஸ், மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
2. T. குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ், 42, 44, பெரியகடை, யாழ்ப்பாணம்.
3. E. விஜயரத்தினம், 'மைலண்ஸ்' கட்டடம் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**கொழும்பு:**
1. இரத்தினு ஸ்ரோர்ஸ், 180/4, கெய்சர் வீதி, கொழும்பு.

**சீமா சில்க் இன்டஸ்ரீஸ்**
லிமிட்டெப்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தந்தி: "சீமா இல்க்" தொலைபேசி: 23170.
— உயர்ந்த ரக ஷேர்ட்டிங்ஸ் தயாரிப்பாளர்
(8059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் வருட நினைவஞ்சலி



### தி. மோகன்

தோற்றம்: 8-12-1961 மறைவு; 20-11-1987

திதி:- 08-12-1988

அம்பிகையின் திருவடியை அடைந்தீரோ!
ஆறாத துயரத்தைக் கொடுத்தீரோ!
இவ்வுலக வாழ்க்கையை வெறுத்தீரோ!
ஈடில்லாப் புகழ் தன்னை எய்தினீரோ!
எப்பிறப்பும் எம்முடனே பிறப்பீரோ!

அப்பா, அம்மா,
சகோதரர்கள், மைத்துனர்,
மருமகன், மாமி.

14, சேர்பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (8057)

## 45ஆம் நாள் நினைவு தினம்

(8. 12- 88)

அணையாத எங்கள் அகல்விளக்கே!
மங்காத சோதியே! மறைந்து விட்டாய்.
இல்லை
நீ எம் மனதை விட்டு மறையவில்லை.



### செல்வன் சுப்பிரமணியம் இரவீந்திரா

(அல்பா, விங், ஐடியல் மாவடி கல்வி நிலைய விஞ்ஞான ஆசிரியர்)

அன்னை மடியில்: 14- 10- 1966 காலன் அடியில்: 25- 10- 1988

ஐப்பசித் திங்கள் 25 ஆம் திகதியே!

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் மூழ்கடிக்கச் செய்து விட்டாயே! காலனே! நீ எம் ஆருயிர் மைந்தன் இரவீந்திராவை அந்தரத்தில் கவர்ந்த நிலையை எவ்வாறு மறப்போம்! எமது இனிய ரவியே! ரவியழகா!! பரீட்சை எடுப்பதற்காகச் சென்றாயே! ஆனால் உன்னை விதி பரீட்சித்து விட்டதுவே! பல மணித்தியாலங்களின் பின்தான் உன் செய்தி அறிந்தோம்; துடித்தோம்! காலமெல்லாம் இனி எமக்குத் துடிப்புத்தானே... மகனே! உன் நினைவலைகள் எம் உள்ளம் எனும் படகை அடித்து நொருக்குகின்றனவே! எம்மைப் பிரிய மனமின்றிப் பிரிந்தாயே! பிரிந்தும் நாற்பத்தைந்து தினங்கள் ஆகிவிட்டனவே! எம்மையெல்லாம் நடைப்பிணமாக்கி விட்டாயே! எமதுயிரே! உன் நினைவு எமது ஆவி மறையும்வரை எம்மை வாட்டி வதைத்த வண்ணமே இருக்கும். அதேபோல் உன்முகம் எம்முன் என்றும் நிழலாடிய படியே இருக்கும். இறைவா! நீ இப்படியா எம்மை வாட்ட விரும்பினாய்? எனினும் எம்முயிர் மைந்தனுக்குச் சாந்தி அளித்து உன் பொன் அடியிற் சேர்த்திடப் பிரார்த்திக்கின்றோம்.

ஐயா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

மாவடி ஆலயவீதி,
சங்கானை (8177)

## First Death Anniversary

Birth: 9-3-1905 Death: 21-11-1987

Thithy: 8-12-1988

IN TREASURED MEMORY OF

### Mrs: SELLAMMAH MUTTAIYA

(MALAYAN PENSIONER)

Sadly missed and fondly remembered by your ever loving sons, daughters, son-in-law, daughter-in-law, a host of grand and great grand children and relatives.

"Kulasthan"
Kokuvil East,
Kokuvil.

(7766)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கதிரவேலு திருநாவுக்கரசு

தோற்றம்: 14-01-1917 மறைவு: 01-12-1986

திதி: 08-12-1988

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் எம்மை வாழவைத்த பாசம் நிறைந்த தந்தையே! உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

94, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (7756)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கதிரவேலு சுப்பிரமணியம்

(ஸ்தாபகர் இராசம் மோட்டார் ஸ்ரோர்ஸ்)

தோற்றம்:- 15. 01. 1927 மறைவு:- 01. 12. 1986

திதி:- 08. 12. 1988

எங்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்து அமரரான தங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மருமக்கள்.

(8070)

## தேர்தல் அதிகாரிகளுக்கு விசேட காப்புறுதி

### அரசாங்கம் ஆலோசனை

கொழும்பு டிச 8

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் கடமையில் ஈடுபடும் தேர்தல் அதிகாரிகளையும் மற்றும் தேர்தல் உத்தியோகத்தர்களையும் காப்புறுதி செய்வது குறித்து அரசாங்கம் தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

தீவிரவாதிகள் விடுத்திருக்கும் அச்சுறுத்தல் காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் கடமை புரிய பெரும்பாலான அரசாங்க அதிகாரிகளும், அரசாங்க உத்தியோகத்தர்களும் பின்நிற்கின்றனர்.

இதன் காரணமாக எதிர்வரும ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஒன்று ஏற்படலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் பங்குபற்றுவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் அனைவரையும்காப்புறுதி செய்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாடு முழுவதும் மொத்தம் 8 ஆயிரத்து 72 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

தேர்தல் கடமைகளில் நாடு முழுவதும் 80 ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். (உ-ஐ)

## பிள்ளைகளின் ஆர்வத்துக்கேற்ப பெற்றோர் செயற்பட வேண்டும்

### கலை நிகழ்ச்சியில் கல்விப்பணிப்பாளர்

பிள்ளைகளின் விருப்பு, வெறுப்பு, ஆர்வத்தைப் பற்றிக் கவனிக்காது பெற்றோர் தங்கள் இலட்சியத்தை நிறைவேற்றப் பிள்ளைகளைத் தூண்டுகிறார்கள் இதனால் பிள்ளைகள் பல நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது".

யாழ் மாவட்டகல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் ஆசிரிய சேவை முன் பயிற்சியை முடித்து வெளியேறும் ஆசிரியர்கள் நடத்திய கலை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்

பயிற்சி ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தோடு மட்டுமன்றி கலையுடனும் ஈடுபாடு காட்ட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இக்கலை நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றியகலைப் பேரரசு திரு ஏ. ரி. பொன்னுத்துரை, பேசுகையில் கூறியதாவது:-

"சில காலத்திற்கு முன்னர்பாடசாலைகளில் நாடகம் பழக்க முயற்சித்தால், பெற்றோரிடமிருந்தும், மற்றோரிடமிருந்தும் எதிர்ப்பைச் சம்பாதிக்கக் கூடிய ஓர் அபாயமான நிலையை எதிர் நோக்க வேண்டி இருந்தது"

"கலைகளில் இறங்கினால் பிள்ளைகள் மண்ணாகிப் போய் விடுவார்கள்என்ற ஓர் எண்ணம் நிலவியது.

ஆனால்இன்றுகலைவளம் பொசகிஷமானது என எல்லோரும் உணரத் தொடங்கி விட்டனர்.

கிராமப்பக்கங்களுக்குச் செல்லும் ஆசிரியர்கள் கிராமியக் கலை எழுச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்றார். (ச-69)

## கிளிநொச்சியில் மனித உரிமைகள் தினம்

வட்டக்கச்சி, டிச. 8

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு பாடசாலை அதிபர் நா. சோதிநாதன் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக கல்வி அதிகாரி வேலாயுதம் பங்குபற்றினார்.

மனித உரிமை பற்றி உதவி அதிபர், கனகா மகேந்திரா, ஆசிரியை செல்வி சி சற்குணேஸ்வரி, செல்வன் இரமேஸ் ஆகியோர் உரையாற்றினார்கள். (ச-ரி)

## புனரமைப்பு வேலைகள்

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோவிலின் புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் [illegible]றது. (இ-111)

## ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திரு. N. M. C. மகேசன்

தோற்றம்: 16 09- 1924 மறைவு: 04- 12- 1983

திதி: 08- 12- 1988

கால மர நிழல்கள் காய்ந்தொழிந்து போனாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது.

மனைவி, பிள்ளைகள்.

T.C லேன்,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய். (8151)


# Jaffna English Academy

(A LUX IN TENEBRIS)

## SPOKEN ENGLISH

- 2 மாதத் துரிதப் பயிற்சி
  வெளிநாடு செல்வோருக்கு சிறந்தது.
- அச்சடித்த குறிப்புக்கள் இலவசம்
- தனிப்பட்ட கவனம்

Full Course Fee: Rs. 150/-
Lectures: Tuesdays, Wednesdays & Thursdays
8-30 a. m. to 10-30 a. m
Commencement: 8.12.88

## உதவி ஆங்கில ஆசிரியர் தேர்வு

One Month Special Intensive Course designed to meet the Examinational Requirements:
Full Course fee: Rs. 100/- only
Lectures: Tuesdays, Wednesdays & Thursdays
10-30 a. m. to 12-30 p. m.
Commencement: 8 12.88

## NCE (Elementary) Examination:

LONDON CERTIFICATE

London Examination heid in Jaffna English Academy The Local Examination Centre for Pitmans

Assessment of Answerscripts and Award of Certificates from Pitsmans London.

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்றுப் புலமை பெறவும் LONDON CERTIFICATES பெறவுமரியதொரு சந்தர்ப்பம்.
Lectures: Saturdays & Sundays
10.30 a. m. to 12.30 p. m.
Duration: 3 months
Course fee: Rs, 350/- only
Commencement: 4.12.88

## TOEFL:

Lectures: Saturdays & Sundays
8 - 30 a. m. to 10 - 30 a, m.
Duration: 3 months
Course fee: Rs. 300/- only
Commencement: 4-12.88

விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

9, Rakka Lane, Chundikuli, Jaffna.

(C-863)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்

**பொருள்:**

கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பைக் கொள்ளாமல் பெறுகின்ற பொருளைக் கொள்ளும் விலைமகளிரும், கள்வரும் ஒரு நிகரானவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - ஒருமை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24605
யாழ்ப்பாணம். 22073
08-12-1988 த. பெ. இல 23


## மாணவருக்குச் சபாஷ்!

ஆறும் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில், அகில இலங்கையிலும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் கே. சாகரலிங்கம் முதலாவதாகச் சித்தி அடைந்துள்ளார்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில், அகில இலங்கை ரீதியில் வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் பூ. அனுதர்ஷன் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இரண்டு மாணவர்களையும் அவர்கள் நிலைநாட்டிய சாதனைகளுக்காகப் பாராட்டுகிறோம். அவர்கள் பயின்ற பாடசாலைகளின் ஆசிரியர்களை மெச்சுகிறோம்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அனுபவித்துவரும் பன்முகப்பட்ட அவஸ்தைகளின் மத்தியிலும், தமிழ் மாணவர்கள் சாதனை படைத்திருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்றுமாகும்.

இந்த இரு பிரதேசங்களிலும் நடந்த அனர்த்தங்களால், தமிழ்ச் சிறுர்கள் இழந்த பாடசாலைகள் நாட்கள் பல. உளரீதியில் உண்டான பாதிப்போ சொல்லுதற்கோ, எழுதுவதற்கோ அடங்காது.

தமிழ்ப் பிஞ்சு நெஞ்சங்களில் உண்டான உளவியல் காயங்கள் குறித்தும் அவற்றை ஆற வேண்டிய அவசியமான சமூகப்பணி குறித்தும் இப்பத்தியில் கடந்த வாரம் (1.12 1988 இல்) வலியுறுத்தி இருந்தோம். சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் சுட்டிக்காட்டியிருந்த சிறுர்களின் சிந்தை ஒடிந்த நிலையை எடுத்துரைத்தோம்.

அத்தகைய சூழ்நிலையிலும் எமது மாணவர்கள், பெற்றோர்கள் கல்வியில் எவ்வளவு கரிசனையாக இருந்தார்கள், இருக்கிறார்கள் என்பதையே ஐந்தாம், ஆறும் ஆண்டு மாணவர்கள் நிலை நாட்டிய சாதனைகள் எடுத்தியம்புகின்றன.

கல்வி தான் உலகில் தேடுதற்கரிய பெரும் சொத்து என்பதில் தமிழர்கள் தமது நிலை தாழ்ந்து போவதை விரும்பவில்லை என்பதையே இது மேலும் உறுதி செய்கிறது. இது மகிழ்ச்சியைத் தருகிறது. எப்பாடுபட்டாலும் கல்வி அறிவைத் தேடுதல் வேண்டும் என்ற நிலை மேலும் நீண்டு நிலைக்க வேண்டும். அப்போதுதான் தமிழர் சமுதாயம் உலகத்தில் தலைநிமிர்ந்து நிற்க முடியும். மற்றவர்கள் அடக்கி, ஒடுக்க எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக நின்று போராட முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் பிரகாரம், 1980ஆம் ஆண்டிற்குப் பின்னர் எமது மாணவர்கள் முன்னையவர்களை விட கல்வியிலும் ஒழுக்கத்திலும் மிகவும் முன்னேற்றம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பது கண்டறியப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி வெளியிட்ட இந்தத் தகவலும், இச் சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இன்றைய சிறுர்கள் நாளைய இளவல்கள். அவர்களே எதிர்காலத்தின் பிரஜைகளும் தலைவர்களும் ஆவர்.

ஆகவே அவர்கள், கல்வியில் கரிசனை உடையவர்களாகவும், நம்பிக்கைகளாகவும் வளர்ந்து வர ஆசிரியர்களும் பெற்றோர்களும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அப்போது தான் கல்வி அறிவும், நல்லொழுக்கமும் நிறைந்த தமிழர் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

## அமெரிக்க மக்களுக்கு "கிறிஸ்மஸ் பரிசு"
### கோர்பச்சேவ் வழங்குவார்

மாஸ்கோ டிச 7

சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் ஐ. நா. பொதுச் சபையில் பேசுவதற்காக நேற்று மாஸ்கோவில் இருந்து நியூயோர்க் புறப்பட்டார்

இந்த விஜயத்தின் போது புதிய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை திரு கோர்பச்சேவ் சந்தித்துப் பேசுவார்.

ஐ நா. உரையில் திரு கோர்பச்சேவ் அமெரிக்க மக்களுக்கு 'கிறிஸ்மஸ் பரிசு' ஆக முக்கிய செய்தி ஒன்றை விடுப்பார் என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ)

## சோவியத் யூனியனை உளவு பார்த்த
# அமெரிக்க விண்கலம் 'அட்லாண்டிஸ்'
### மீண்டும் பூமிக்குத் திரும்பியது

வாஷிங்டன், டிச 7

அமெரிக்க விண்கலம் 'அட்லாண்டிஸ்' தனது இரகசிய வெண்வெளிப் பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பியது.

இராணுவ நடவடிக்கைகளை உளவு பார்க்க இரகசியமாக அனுப்பப்பட்ட முதலாவது உளவு விண்கலம் இதுவாகும்.

சோவியத் யூனியனில் உள்ள இராணுவ தளங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உளவு பார்க்க இந்த விண்கலம் பயன்படுத்தப்பட்டது.

விண்கலத்தில் அமெரிக்க இராணுவ அதிகாரிகளே பயணம் செய்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை புளோரிடா மாநிலத்தில் உள்ள கேப் கனவரல் விண்வெளி நிலையத்தில் இருந்து 'அட்லான்டிஸ்' அனுப்பப்பட்டது

அட்லான்டிஸ்' ஐ ஸ்வான வெளிக்கு எடுத்துச் சென்ற ரொக்கட் அத்திலாந்திக் கடலில் இருந்து சனிக்கிழமை மீட்கப்பட்டது

கலிபோர்ணியாவில் உள்ள எட்வர்ட்ஸ் விமானத்தளத்தில் கடந்த சனிக்கிழமை இவ்விண்கலம் வந்து இறங்குவதாக இருந்தது.

24 மணித்தியாலத்துக்கு முன்னர் பூமிக்குத் திரும்புவதை இவ்விண்கலம் பூமிக்கு அறிவிக்கக் கூடிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த உளவு விண்கலம் கடைசியாக நேற்று பூமிக்குத் திரும்பியது

50 கோடி டாலர் செலவில் இவ்விண்கலம் தயாரிக்கப்பட்டது

சோவியத் யூனியனில் உள்ள 80 சதவீதமான இராணுவ கேந்திர நிலைகளை உளவு பார்க்கக் கூடிய சக்தி வாய்ந்ததாக இந்த விண்கலம் தயாரிக்கப்பட்டது. (எ)

### மீண்டும் அனுமதி

செய்ரோ டிச 7

லிபிய விமானங்கள் செய்ரோ வந்து போக எகிப்து அரசு மீண்டும் அனுமதி வழங்கியுள்ளது.

9 ஆண்டுகளுக்கு முன்னர் லிபிய விமானங்கள் செய்ரோ விமானத்தைப் பயன்படுத்த எகிப்து தடை விதித்திருந்தது. (எ)

### பர்மா அரசியலில் 150 கட்சிகள்

ரங்கூன், டிச 7

பர்மாவில் 150 க்கு அதிகமான அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணைக்குழு கட்சிகளின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டுள்ளன.

ஒரு கட்சி அரசியல் முறைக்கு பர்மாவில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த அரசியல் கட்சிகள் ஸ்தாபிக்கப்பட்டன.

இதனிடையில் சட்டம்- ஒழுங்கு மீண்டும் நாட்டில் நிலவுகிறது என்று எப்போது கருதப்படுகிறதோ அப்போது பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றுஜெனரல் சோ மௌங் தலைமையிலான இராணுவ அரசு அறிவித்திருக்கிறது. (எ)

## 'தமிழர் தேசிய இயக்கம்'
## நெடுமாறனின் புதிய கட்சி

சென்னை, டிச.6

'தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ்' என்ற பெயரில் கட்சி நடத்தி வந்த திரு ப. நெடுமாறன் 'தமிழர் தேசிய இயக்கம்' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றைத் தொடக்கி இருக்கிறுர்

ஸ்ரீரங்கத்தில் நடந்த ஆலோசனைக்கூட்டத்தில் புதிய கட்சியின் கொள்கை, கொடிப் பெயர்பற்றி முடிவு செய்யப்பட்டன. மூன்று நிறங்களில் கட்சியின கொடி இருக்கும்.

மேலே சிவப்பு, நடுவில் மஞ்சள், கீழே நீல நிறம்

கட்சியின் கொள்கை விபரம் வருமாறு.-

அரசியல் கொள்கை முழுமையான சுயநிர்ணய உரிமை கொண்ட சோஷலிச தன்னுட்சிதமிழகத்தை உருவாக்கப் பாடுபடுதல்

ரஷியாபோல ......... ரஷியா நாட்டில் அமைந்துள்ளது போல இந்திய நாட்டிலும்சகல மொழிவழி தேசியஇன மக்களும் தத்தமது தாய் தன்மைக்கு ஏற்ப தனித் தனி அரசியல் சட்டங்களை அமைத்துக் கொள்ளும் உரிமைக்காகப் போராடுதல்.

தன்னுட்சி உரிமை கொண்ட தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குதல்.

தமிழர் தியாகப்படை என்ற பெயரில் தொண்டர்படை ஒன்றை அமைப்பது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (எ)

# நிக்கரகுவா அரசு அதிபரின் அமெரிக்க விஜயம் ரத்து!

மனுகுவா, டிச 7

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா செல்ல இருந்த தனது பயணத்தை நிகரகுவா ஜனாதிபதி ஜெனரல் டானியல் ஒற்றேகா ரத்துச் செய்து விட்டார்,

ஜெனரல் ஒற்றேகா தலைமையில் 18பேர் கொண்ட தூதுக்குழு ஒன்று ஐ நா பொதுச் சபையின் அடுத்தவாரக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்தது.

ஜெனரல் ஒற்றேகா அக்கூட்டத்தில் உரை நிகழ்த்த இருந்தார்.

இதற்காக 18 பேருக்கும் விஸா கோரி அமெரிக்க அரசுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சு, விண்ணப்பித்த 18 பேரில் 9 பேருக்கு மட்டுமே விஸா வழங்கியது. ஏனைய ஒன்பது பேருக்கு விஸா வழங்க முடியாது என்று அறிவித்து விட்டது.

இதைத் தொடர்ந்தும், அமெரிக்காவில் நிற்கும் சமயம் தனக்கும் சில கட்டுப்பாடுகளை விதித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தனது அமெரிக்கப் பயணத்தை ரத்துச் செய்து விட்டதாக ஜெனரல் ஒற்றேகா அறிவித்தார்.

## ஆப்கனில் அமைதி நம்பும்; சோவியத் அரசு நம்பிக்கை

ரியாட், டிச 7

ஆப்கன் கெரில்லாத் தலைவர்களுடன் நடத்திய முதலாவது உயர் மட்டப் பேச்சுக்கள் திருப்திகரமானவையாக அமைந்திருந்தன என்று சோவியத் பிரதி வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

சவூதி மன்னர் பஹ்தைச சந்தித்துப் பேசிய போது, "விரைவில் ஆப்கனிஸ்தானில் அமைதி திரும்ப வழி ஏற்பட்டிருக்கிறது"— என்று சோவியத் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

புரிந்துணர்வு இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்ட போதிலும், பரவலாக்கப்பட்ட விதத்தில் ஆப்கனில் ஓர் அரசை அமைக்கும் விஷயத்தில் இணக்கம் காணப்படவில்லை என்று பிபிசி தெரிவித்தது. (எ)

## வெளி உலகில்

## ஜனதிபதித் தேர்தல் முதற் கட்ட வேலையே இழுபறியான நிலையில்

கொழும்பு, டிச 8

ஜனதிபதித் தேர்தலுக்கு இன்னும் 11 நாட்களே இருக்கின்றன. ஆனால் இதன் முதல் கட்டமே இழுபறியில் இருந்து வருகிறது. கடந்த 28 ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மொத்தம் 26 மாவட்டங்களில் 22 மாவட்டங்களில் இது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனுல் தபால் மூலம் வாக்களிக்கும் காலஎல்லை தேர்தல் தினமான டிசம்பர் 19 வரை நீடிக்கப்படக்கூடும் என்று தெரிகிறது.

போக்குவரத்துச் சீர்கேடு. பதற்ற நிலை பயமுறுத்தல்கள் ஆகியன காரணமாக அரச அதிபர்கள் தேர்தல் ஆணையாளரிடமிருந்து தபால் வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளத் தவறியதே பெரும்பாலான மாவட்டங்களில் தபால் மூலம் வாக்களிப்பு ஆரம்பிக்கப்படாததுக்கும் காரணம் என்று கூறப்படுகிறது.

இம்மாதம் 9 ஆம் திகதி தபால்வாக்களிப்பை முடித்துக் கொள்ள முன்னர் திட்டமிடப்பட்டு இருந்தது. (இ எ)

## நாட்டின் எல்லாப்பகுதிகளிலும்
# திட்டமிட்டபடி தேர்தலை நடத்த அரசு முயற்சி

யாழ்ப்பாணம், டிச 8

திட்டமிட்டபடி ஜனதிபதித் தேர்தலை எதிர் வரும் 19 ஆம் திகதி வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் நடத்துவதற்கு கொழும்பிலுள்ள தேர்தல் ஆணையாளர் திணைக்களம் முயற்சித்து வருகிறது

வடபகுதிக்கான தேர்தல் ஆவணங்கள் அனைத்தும் உரிய நேரத்தில் கொழும்பிலிருந்து விசேஷ விமான மூலம் அனுப்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளையில் எதிர் வரும் ஜனதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு யாழ் தேர்தல் மாவட்டத்திலிருந்து மொத்தம் 5 லட்சத்து 91 ஆயிரத்து 74 பேர் தகுதி பெற்றிருக்கின்றனர்.

யாழ் தேர்தல் மாவட்டத்தில் மொத்தம் 467 வாக்களிப்பு நிலையங்கள் ஒன்றிணைக்கப்பட்டு 160 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களாக அமைக்கப்படும்.

வாக்குகளை எண்ணும் வேலைகள் அந்த அந்த மாவட்டக் கச்சேரிகளிலேயே மேற்கொள்ளப்படும்

தற்போது நாட்டில், தபால் சேவைகள் பாதிப்புகளுள்ளாகியிருப்பதால் வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் கூட வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது பெயர் வாக்களிப்பு பட்டியலில் காணப்படுமேயானுல் வாக்களிக்க வகை செய்யப்படுமாம்.

யாழ்- மாவட்டத்தில் தபால்மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் காலதாமதமாகவே கிடைத்திருக்கின்றன

இதனுல் தபால்மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கிடைக்காமல் போகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது (உ-ஐ 5)

## நெடுந்தீவில் செஞ்சிலுவைச் சங்கம உதவி

நெடுந்தீவு, டிச 8

யாழ் செஞ்சிலுவைச் சங்கம், நெடுந்தீவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கவுள்ளது.

முன்னேடியாகப் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 5லிற்றர் மண்ணெண்ணெய்யை அது வழங்கியது

அரிசி சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருட்களையும் செஞ்சிலுவைச் சங்கம் இயது வழங்கவுள்ளது

இதற்கென ஒரு தொகுதிப் பொருள்கள் நெடுந்தீவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன (இ-111)

## மழை இல்லை: விவசாயிகள் பாதிப்பு

நெடுந்தீவு டிச 8

நெடுந்தீவில் இம்முறை போதிய அளவு மழைவீழ்ச்சி இல்லாததால் அங்குள்ள விவசாயிகள் பெரிதும் கவலை கொண்டுள்ளனர்.

எனினும் நன்னீர் உள்ள பகுதிகளில் வெங்காயச் செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் அவர்கள் ஆர்வம் காட்டுவது குறிப்பிடத்தக்கது (இ 111)

## ஜனதிபதித் தேர்தலில் ஒஸிபைக் கூட்டணி ஆதரிக்குமா?

ஜனதிபதித்தேர்தலில் இலங்கை மக்கள் கட்சி வேட்பாளர் ஒஸி அபய குணசேகராவை தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரிக்குமா?

'ஆதரிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு'- இப்படி மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் வை. பி.டி. சில்வா தெரிவித்தார்.

ஜனதிபதித் தேர்தல் தொடர்பாகதமிழர்விடுதலைக் கூட்டணியின் அறிக்கையை நாம் எதிர் பார்த்திருக்கிறோம்- என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ் விஜயம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்:

பிரசாரக் கூட்டங்களை நடத்தும்படி அங்குள்ள மக்கள், இயக்கங்கள் எம்மைக் கேட்டுள்ளன.

'யாழ் விஜயம் வெற்றி அளித்துள்ளது' என்று திரு. சில்வா தெரிவித்தார்

இப்படி அவர் கூறினார். (இ எ)

## நிவாரணப் பணம் வழங்க மக்கள் வங்கி தயார

மாங்குளம் டிச 8

மாங்குளம் மக்கள் வங்கிக்கிளையிலிருந்து அரசாங்க நிவாரணப் பணமான ரூபா 2 000 வழங்கும் வேலைகளை மாங்குளம் மக்கள் வங்கிக்கிளை மேற்கொண்டுள்ளது.

நாளொன்றுக்கு 500 பேர் வீதம் புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கு இவ்வங்கியூடாக நிவாரணப் பணம் வழங்கப் படும்.

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கு முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையூடாக வழங்குவதற்கும் ஏற்பாடாகியுள்ளதாகவும், இதற்கான சகல நடவடிக்கைகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் எடுத்துள்ளதாகவும், மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. தேவராசா உதயனுக்குத் தெரிவித்தார். (ச-94)

## முல்லைத்தீவில் 15இல் பாடசாலை விடுமுறை

முல்லைத்தீவு டிச 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளையும் 15ஆம் திகதி வரை நடத்த வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட பிரதேச கல்விப் பணிப்பாளர் செல்வி கே எஸ் இராசரத்தினம் [illegible] (ச-94)

## 2 வருட சம்பளக் கடன்பெற 40 பேரே இதுவரை படிவம் கையளித்தனர்

யாழ் கல்வித் திணைக்களத்தில் இரண்டு வருட சம்பளக் கடனைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்ற 1450 பேரில் இதுவரை 40 பேரே படிவங்களைப் பூர்த்தி செய்து மீளக் கையளித்துள்ளனர்.

கல்வித் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

கடனைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்பட்டு வந்தன.

கடனைப் பெறுவதற்கு இரண்டு பிணையாளர் [illegible] தேவை என்று பொது நிர்வாக அமைச்சு வலியுறுத்தி இருந்தது.

தற்பொழுது மேற்படி பிணையாளர் உறுதி உரை தேவையல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் இவ்விடயம் சார்பான சுற்று நிருபம் எதுவும் பொது நிர்வாக அமைச்சினுல் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை.

இதன் காரணமாகவே இந்த விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்திக் கையளிக்க தயக்கம் காட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## நூல் வெளியீட்டு விழா

கதிரமலையாவின் மனோன்மணி அந்தாதி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிறு 9-30 மணிக்கு ஊரெழு மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தில நடைபெறும்

நிகழ்ச்சிக்கு கலாநிதி, வித்துவான் க. ந இரத்தினவேல் தலைமை வகிப்பார்.

பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ் நூல் வெளியீட்டு உரை நிகழ்த்துவார்.

கவிஞர் முருக. வே. பரமநாதன் ஆய்வுரை செய்வார். (இ)

## நியமனம்

கொழும்பு மாநகர சபையில் முதலாம் தரப் படவரைஞராக கடமையாற்றிய ரீ. ஆறுமுகம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதியாகக் கடமையாற்றுவதற்கு சாவகச்சேரி நகரசபைக்கு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப் பட்டுள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுரம் ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

# உதயன்

வியாழக்கிழமை 8 - 12 - 1988

சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

## ப. நோ. கூ. சங்கங்களில் அரிசிக்குப் பற்றுக்குறை

யாழ் மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அரிசிக்குப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

ஏழாவது உணவு முத்திரைக்குக்கூட அரிசி வழங்க முடியாமல் போகும் நிலை கூட்டுறவுச்சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பதால் தனியார் அரிசி ஆலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளன.

இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் தனியாரிடம் இருந்து அரிசியைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. (உ-10)

## களவு, கொள்ளைகளை தடுக்க ஒத்துழைப்புக் கோருகிறது இந்திய அமைதிப்படை

யாழ்ப்பாணம், டிச. 8

கொலை, கொள்ளை, திருட்டு முதலியவற்றை இந்திய அமைதிப்படை எதிர்க்கிறது. அத்தகைய செயல் பற்றிய தகவலை அருகாமையிலுள்ள இந்திய அமைதிப் படையினருக்குக் கொடுத்தால் இச்செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்யக் கூடியதாகவிருக்கும்.

— இந்திய அமைதிப் படை வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்தன.

''மக்கள் தங்கள் பிரதிநிதிகளை இந்திய அமைதிப் படையுடனோ அல்லது ரோந்துப் படையுடனோ அனுப்பி உதவ தங்கள் ஒப்புதலை அளித்துள்ளனர். ஆனால் ஒருவரும் அவ்வாறு செய்ய முன்வரவில்லை. சமூக விரோதிகளை ஒழிக்க அமைதிப் படையுடன் உதவ மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்,'' — இப்படி அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## மொட்டையடிக்கப்பட்டு மின்கம்பத்தில் இளைஞர்!

யாழ்ப்பாணம், டிச 8

திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் மொட்டையடிக்கப்பட்டு மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தார்

கல்வியங்காட்டுச் சந்தியில் உள்ள மின்கம்பம் ஒன்றிலேயே அந்த இளைஞர் நேற்றுக்காலை முதல் மதியம் வரை கட்டப்பட்டிருந்தார்.

பின்னர் நேற்றுமாலை அதே இளைஞர் முத்திரைச் சந்தைப் பகுதியில் மின் கம்பம் ஒன்றில் கட்டப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-72)

## கட்டைப்பிராய் பகுதியில் ஆயுதபாணிகளின் கைவரிசை

யாழ்ப்பாணம் டிச 8

வீட்டில் இருந்தவர்களை அறைக்குள்போட்டு பூட்டிவிட்டு, அங்கிருந்து நகைகள் பணம் போன்றவற்றை ஆயுதபாணிகளாக வந்தோர் கொள்ளையடித்துச் சென்றனர்.

திங்கட்கிழமை இரவு கட்டைப்பிராய் கலைமணி வீதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

12 பவுண் தங்கநகைகள், 15 ஆயிரம் ரூபா பணம், மணிக்கூடு போன்றவையே கொள்ளையிடப்பட்டதாக அறியவருகிறது. [ஒ-10]

## இறைவரித் திணைக்கள அலுவலகம் இயங்குகிறது

யாழ்ப்பாணம், டிச 8

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் மீண்டும் நேற்று முதல் இயங்கத்தொடங்கியுள்ளது.

நீண்ட காலத்துக்குப் பின் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் மூடப்பட்டிருந்த காலப் பகுதியில் தேங்கிக் கிடந்த வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தவேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்படும் வரை பொதுமக்களுடன் தொடர்புடைய வேலைகள் எதனையும் திணைக்களம் மேற்கொள்ளாது என்றும் அறியவந்துள்ளது. (உ-10)

## தமிழ்நாடு தேர்தல் திகதி திங்கள் அறிவிக்கப்படும்

தமிழ்நாடுசட்டசபைத் தேர்தல் நடைபெறும் திகதிகள் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை அன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். இந்தியத் தேர்தல்கமிஷன் அதிகாரிஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு மாநிலத்தில் ஜனாதிபதிஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்திருப்பது குறித்து தேர்தல் கமிஷனுக்கு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது (உ)

## ஆனையிறவு உப்பளத்தில் லொறிகள் வரிசையில்!

தாளையடி, டிச. 8

ஆனையிறவு உப்பளத்தில் இருந்து தென்பகுதிக்கு உப்பு ஏற்றிச் செல்வதற்காக வடபகுதி லொறிகள் தினமும் வரிசையில் நிற்கின்றன.

தென்பகுதியில் உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் வடபகுதியில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் லொறிகள் உப்பு மூடைகளை ஏற்றிச் செல்கின்றன. (ஒ-ச-144)

### மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டதால்

## பெருமளவு தடுப்பூசிகள் பாவிக்க முடியாத நிலையில்!

யாழ்ப்பாணம், டிச. 8

வடபகுதிக்கான மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டதையடுத்து யாழ் மாவட்டத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான தடுப்பு ஊசி மருந்து வகைகள் பாவனைக்கு உதவாத நிலையை அடைந்துள்ளன.

குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த மருந்து வகைகளே இந்த நிலையை அடைந்துள்ளன.

யாழ் மாவட்டத்தில் உள்ள பல ஆஸ்பத்திரிகள் மாற்று வழியில் மின்சாரத்தைப் பெறுவதற்கு ஜெனரேட்டர் வசதிகளைக் கொண்டிருக்கவில்லை.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் ஜெனரேட்டர் வசதி இருந்தும் சில மணித்தியாலங்கள் மட்டுமே அது இயங்கக்கூடிய நிலையில் இருக்கிறது.

இதன் காரணமாகவே தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்த 700 நோயாளர்களுக்குப் பாவிக்கக்கூடிய தடுப்பு ஊசி மருந்துகள் பாவனைக்கு உதவாத நிலையை அடைந்துள்ளன.

கோண்டாவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த 350 நோயாளர்களுக்குப் பாவிக்கக் கூடிய மருந்து வகைகளும் பழுதடைந்துள்ளன.

இதே போல் பளை, கிளிநொச்சி ஆஸ்பத்திரிகளில் வைக்கப்பட்டிருந்த தடுப்பு ஊசி மருந்துகள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதாக அறியவந்துள்ளது

எனினும் யாழ் மாவட்டத்தில் மானிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி மருத்துவ அதிகாரிகள் பிரிவின்கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்குரிய தடுப்பு ஊசி மருந்துகள் யாழ் சுகாதாரத் திணைக்களத்தில் பத்திரப்படுத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வைத்தியசாலையில் வெளிநாட்டு வைத்தியர்கள் கடமை புரிவதால் மருந்துகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஏற்பாடுகளை அவர்கள் முன்கூட்டியே செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதே சமயம் நாய்களுக்கு விசர் ஏற்படாமல் தடுக்கும் தடுப்பு ஊசி மருந்துகளும் பழுதடைந்துள்ளன

ஆயிரத்தி ஐநூறு தடவை பாவிக்கக்கூடிய இந்த மருந்து வகைகளும் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியிலேயே வைக்கப்பட்டிருந்தன. (உ-10)

## ஜனாதிபதி கொலை முயற்சி; மூவர் மீது 10 குற்றச்சாட்டுகள்

கொழும்பு, டிச 8

நாடாளுமன்றக் கட்டடத்தில கடந்தஆண்டு ஆகஸ்டில் இடம் பெற்ற கிரனேட் தாக்குதல் தொடர்பாக மூவர் மீது கொலை, கொலை முயற்சிக் குற்றச்சாட்டுக்கள் உட்பட 10 குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவுள்ளன.

குற்றஞ் சாட்டப்படுபவர்களில் ஒருவர் நீண்ட காலமாகத் தேடப்பட்டு பின்னர் கைதான நாடாளுமன்ற ஊழியர் அஜித்குமார.

இவ் வார இறுதிக்குள் குற்றப்பத்திரிகைகொழும்பு மேல் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் சுமத்தப்படவுள்ள பத்துக் குற்றச்சாட்டுக்களில் சில வருமாறு.

★ ஜனாதிபதியைக் கொலை செய்யச் சதி புரிந்தது.

★ ஜனாதிபதியைக் கொலை செய்யமுயற்சித்தது.

★ மாத்தறை மாவட்ட அமைச்சர் கீர்த்தி அபயவிக்கிரமாவைக் கொலை செய்தது.

★ நாடாளுமன்ற கொரடா அலுவலக அதிகாரி நோபர்ட் சேனாதிராவைக் கொலை செய்தது.

★ அமைச்சர் லலித் அத்துலத்முதலியைக் கொலை செய்ய முயற்சித்தது. (உ-எ)

## பதவியுயர்வு

யாழ்ப்பாணம் டிச 8

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலை முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ் சொக்கலிங்கம் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு பருத்தித்துறை சாலை முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ் மணிவாசகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

டிசம்பர் முதலாம் திகதியில் இருந்து இவர்கள் தமது பதவிகளைப் பொறுப்பேற்றனர். (உ-10)

### மேலும் 4,762-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிக் கிளை)

★ கோப்பாய் வடக்கு—128

★ கோப்பாய் தெற்கு—238

★ உரும்பராய் — 54

4. உடுவில் உ. அ. அ. பிரிவு—365 குடும்பங்கள் (சுன்னாகம், இலங்கை வங்கிக் கிளை)

★ குப்பிளான் — 365

5. சரவெட்டி உ. அ. அ. பிரிவு—252 குடும்பங்கள் (நெல்லியடி, மக்கள் வங்கிக் கிளை)

★ வல்வெட்டி — 252

நேற்று வங்கிகளுக்கு அனுப்பப்பட்ட பட்டியலின் விவரம் வருமாறு:-

1 உடுவில் உ. அ. அ. பிரிவு—101 குடும்பங்கள் (சுன்னாகம், மக்கள் வங்கிக் கிளை)

★ சங்குவேலி — 101

2. கரவெட்டி உ. அ. அ. பிரிவு— 88 குடும்பங்கள் (நெல்லியடி, மக்கள் வங்கிக்கிளை)

★ கரணவாய் கிழக்கு-88

3. கோப்பாய் உ. அ. அ பிரிவு—828 குடும்பங்கள் (யாழ். ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக் கிளை)

★ இடைக்காடு — 168
★ ஊரெழு — 167
★ பத்தமேனி — 12
★ அச்சுவேலி வடக்கு — 32
★ நீர்வேலி — 72
★ புத்தூர் கிழ — 377

4. யாழ்ப்பாணம் உ. அ. அ. பிரிவு — 1,048 குடும்பங்கள் (யாழ் ஸ்டான்லி வீதி இலங்கை வங்கிக் கிளை)

★ ஈச்சமோட்டை—116
★ நாவாந்துறை — 299
★ கண்டுக்குளி — 34
★ குருநகர் — 60
★ கொழும்புத்துறை — 183
★ முஸ்லிம் வீதி — 356

5. தெல்லிப்பளை உ. அ. அ. பிரிவு— 772 குடும்பங்கள் (காங்கேசன்துறை, இலங்கை வங்கிக் கிளை)

★ பலாலி கிழக்கு—74
★ பலாலி மேற்கு—137
★ குரும்பசிட்டி, மயிலிட்டி கொல்லங்கலட்டி—561 (ஓ)

### பல்கலைக்...

வர்கள் சிலரைத் தாக்கியதாகவும் சொல்லப்படுகின்றது.

இதனால் ஆத்திரம் அடைந்த மாணவர்கள் துணைவேந்தர் அலுவலகத்தைச் சுற்றி நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு கலைந்து செல்லும் வகையில் நேற்று இவ்விடயம் தீர்த்து வைக்கப்பட்டதாகவும்–

மேலதிக விசாரணைகள் இன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-5)

### கலைப்பட்ட.,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சின் தலைமைச் செயலகமான 'இசுறுபாயாவில்' நடைபெற்றுவருகின்றன

தெரிவு செய்யப்படுவோர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

### அங்கொடை........

(1ஆம் பக்கதொடர்ச்சி)

படக் கூடாதென்று தென்பகுதித் தீவிரவாதக் குழு ஒன்றினால் அச்சுறுத்தப்பட்டதை அடுத்தே ஆஸ்பத்திரியின் ஊழியர்கள் நேற்று ஆஸ்பத்திரிக் கதவுகளைத் திறந்து விட்டு திடீரென ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினர் எனத் தெரிய வருகிறது.

பெருந்தொகையான மனநோயாளர்கள் அங்கிருந்து வெளியேறியிருப்பதை அடுத்து கொழும்பில் மக்களிடையே பீதி ஏற்பட்டிருக்கிறது.

இதேவேளையில், ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய மனநோயாளர்களைக் கண்டு பிடிப்பதில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப் பட்டதாகக் கூறப்படுகிறது.

## இன்றும் மண்எண்ணை விநியோகம்

யாழ்ப்பாணம், டிச.8

யாழ் மடத்தடி எரிபொருள் விற்பனை நிலையத்தில் இன்றும் காலை 9.30 மணி முதல் நண்பகல் 2 மணி வரை மண்எண்ணை விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## இளைஞர் உயிரிழந்தார்

வடமராட்சி, டிச 8

கரவெட்டி கிழவித்தோட்டம் அம்மன்கோவிலடியில் சடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்றில் இளைஞர்ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது. (உ-160)

## மன்னர் கோமா நிலையில்

புதுடில்லி. டிச 8

சடந்த சில மாதங்களாக நோயுற்றிருந்த ஜப்பானிய மன்னர் ஹிரோஹிட்டோ நேற்று கோமா நிலையை அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது (உ)

## திக்காகான் கவர்னரானார்

இஸ்லாமாபாத். டிச. 8

பாகிஸ்தானில் உள்ள மிகப்பெரிய மாகாணமான பஞ்சாபின் கவர்னராக ஜெனரல் திக்காகான் நியமிக்கப்பட்டார்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜெனரல் திக்காகான் ஆளும் மக்கள் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியடைந்தார். (உ-எ)

## 2 பொலீஸார் சுட்டுக்கொலை

கொழும்பு டிச 8

மாரவிலையில் நேற்று தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி இரு பொலீஸார் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்தனர். (உ)

## 15 ஆம் திகதி பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச 8

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து தாதியர் பயிற்சிகளுக்குத் தெரிவாகியுள்ள 52 பேருக்குமான பயிற்சி நெறிகள் யாழ் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும். (உ-10)

### இஸ்ரவேலுடன்...

நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 83 நாடுகள் வாக்களித்தன

எதிர்த்து 21 நாடுகள் வாக்களித்தன.

45 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை (உ-எ)

### படையினரை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது

இந்திய — இலங்கை உடன்பாட்டின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்கள்.

சட்டத்தை மீறி நடப்பவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். ஆகவே சட்டத்துக்கு உட்பட்டு நடப்பவர்களை பாதுகாப்பதில் என்ன தவறு! என்றார். (உ-எ)

## கூட்டத்தொடர் நீடிப்பு

புதுடில்லி, டிச. 8

நேற்று முடிவடைய இருந்த இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளினதும் தற்போதைய கூட்டத்தொடர் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது

வாக்களிக்கும் வயதை 21இல் இருந்து 18 ஆகக் குறைப்பது உட்பட தேர்தல் சீர்திருத்தங்கள் அடங்கிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்காக இந்த நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. [உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திரு. சின்னத்தம்பி சேனாதிராசா

திரு. சின்னத்தம்பி சேனாதிராசா அவர்கள் 7-12-1988 அன்று அதிகாலையில் காலமானார் அன்னார் பிரபல வர்த்தகரும். நீர்ப்பாசனத் திணைக்கள ஒப்பந்தகாரரும், கதிர் ஸ்ரோர்ஸ் ஒட்டுசுட்டான், R. S. அரிசி ஆலை மல்லாகம், கந்தன் றேடர்ஸ் தெல்லிப்பளை ஆகியவற்றின் உரிமையாளரும், காலம்சென்ற சின்னத்தம்பி இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சாந்தாம்பாளின் அன்புக் கணவரும், பாமினி, சாந்தினி, தர்சினி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு சுப்பிரமணியம் (மணி) [லண்டன்], செல்வி சின்னத்தம்பி வள்ளியம்மை) சச்சேரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு சகோதரரும், காலம்சென்ற சுந்தரலிங்கம், பஞ்சலிங்கம் (அப்பு) (V. S. K. ஸ்ரோர்ஸ், வவுனியா), திருமதி சுப்பிரமணியம் (லண்டன்), திருமதி சுந்தராம்பாள் நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலம் சென்ற சதாசிவம் கந்தையா, சதாசிவம் செல்லப்பா [மலேசியா], நாகம்மா இரட்ணம் (மலேசியா), சதாசிவம் செல்லையா ஆகியோரின் அன்பு பெருமானும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 8 12 88 வியாழக்கிழமை (இன்று) பிற்பகல் 1மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை கட்டுட்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

8ஆம் கட்டை,
தெல்லிப்பளை. (8193)

### திருமதி அமிர்தரட்ணம் நாகலிங்கம்

திருமதி அமிர்தரட்ணம் நாகலிங்கம் அவர்கள் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ராஜராஜேஸ்வரி (கனடா). குமாரசாமி (மலேசியா), சுந்தரராஜன் (ஓமான்), சந்திரலிங்கம், குஞ்சிதபாதம் (கனடா), பாலகிருஷ்ணன், விஜயலக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னம்பலம் (கனடா), பராசக்தி (மலேசியா), விஜயதேவி, பூமணி, வனிதாதேவி (கனடா), திருமகள், ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 7-12-88 மாலை 3 00 மணிக்கு சம்பந்தர்கண்டி, காரைநகரில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று அடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயக்குமார்
(ஜெயக்கப்)

(8077)

### திருமதி இராசையா தங்கம்மா

திருமதி இராசையா தங்கம்மா காலமானார். இவர் காலஞ் சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற துரைராசா, (பயில்வான்சராஜ்) பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிங்கராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், கோபாலகிருஷ்ணன் (பொலீஸ் உத்தியோகத்தர். கிளிநொச்சி) பிறேமா, பாமா, வசந்தி, இராஜதுரை, இராஜகுமார், சிவகுமார், ரகுநாதன், உமா, உஷா, இராமநாதன், ரங்கநாதன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சசிரேகா, பானுரேகா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இலக்கம் 3 ஸ்ரான்லிக் கல்லூரி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் (8-12-1988) வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
வ. சிங்கராசா

(8073)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் [illegible] பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 08-12-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications [illegible] Navalar Road, Jaffna on Thursday 8th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org